சுருக்கம்

பழங்குடியினர் நலம் – 2015–2016–ஆம் ஆண்டிற்கு ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் (ITDP areas) பழங்குடியினர்களுக்கு இலவச வீடு கட்டித்தரும் திட்டத்தின் கீழ் வேலூர் மாவட்டத்தில் 8 (எட்டு) வீடுகள்கட்டித் தந்திட ரூ. 16.80 இலட்சம் ஒப்பளிப்பு செய்து – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ப.மே1(2)) துறை

அரசாணை (ப) எண்.52 நாள் 29.02.2016

மன்மத வருடம் மாசி 17
திருவள்ளுவர் ஆண்டு 2047

படிக்கப்பட்டது

பழங்குடியினர் நல இயக்குநர் கடிதம் ந.க. எண்.பமே/அ2/1582/2012,
நாள் 22.01.2016.

*************

ஆணை :-

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், பழங்குடியினர் நல இயக்குநர் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப்பகுதிகளில் (ITDP areas) பழங்குடியினர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டித்தந்திட 2015–2016–ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 16.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், வேலூர் மாவட்டத்தில் 115 நபர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள் கோரி முன்மொழிவுகள் பெறப்பட்டுள்ளது என்றும், எனவே 2015–2016–ஆம் ஆண்டிற்கான பழங்குடியினர்களுக்கான ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டப் பகுதிகளில் செயல்படுத்தப்படும் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் வேலூர் மாவட்டத்தில் மலைப்பகுதியில் ஒரு வீடு கட்டுவதற்கு ரூ.2,00,000/– வீதம் 8 வீடுகளும் மற்றும் அடிப்படை வசதிக்காக ரூ.80,000/– ஆக மொத்தம் ரூ.16,80,000/– அனுமதித்து வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் பெற்று பணமாக்கி பணிகளை செயல்படுத்திடும் வகையில் அரசு ஆணை வெளியிடுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமாக ஆய்வு செய்து, அதனடிப்படையில் வேலூர் மாவட்டத்தில், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 8 வீடுகள் கட்ட வீடு அலகு ஒன்றிற்கு ரூ.2.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.16,00,000/–மும், அடிப்படை வசதி செய்வதற்காக ரூ.80,000/–ம் ஆக மொத்தம் ரூ.16,80,000/– (ரூபாய் பதினாறு இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) 2015–2016–ஆம் ஆண்டு இறுதி திருத்த நிதிஒதுக்கத்திலிருந்து நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

3. மேலே பத்தி 2–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட நலன் – 02 பழங்குடியினர் நலன் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் - II - மாநில திட்டம் 796 – பழங்குடியினர் பகுதித் துணைத்திட்டம் - JN - பழங்குடியினர் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டப் பகுதிகளில் வாழும் பழங்குடியினருக்கு வீடுகள் கட்டிக் கொடுத்தல்– 17 – சிறுபணிகள்
(த.தொ.கு. 2225 02 796 JN 1708) "

4. மேலே பத்தி 2–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவிற்கான நிதி 2015–2016 ஆம் ஆண்டு இறுதி திருத்த நிதிபொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் செலவினத்தை மேற்கொள்ள பழங்குடியினர் நல இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது.

5. மேலே பத்தி 2–ல் ஒப்புதலளிக்கப்பட்ட தொகையினை பழங்குடியினர் நல இயக்குநர் பெற்று வேலூர் மாவட்ட ஆட்சியருக்கு வழங்க அதிகாரம் அளிக்கப்படுகிறது. மேற்படி தொகையில் செலவினம் போக மீதித்தொகை இருப்பின் அரசு கணக்கில் திரும்ப செலுத்தவும், பணிகள் நடைபெறுவது குறித்த பருவ அறிக்கை அனுப்பவும் வேலூர் மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் உரிய கால கெடுவிற்குள் பணிகளை நிறைவேற்றி பயனீட்டுச் சான்றிதழை வேலூர் மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெற்று அரசுக்கு அனுப்பிட பழங்குடியினர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண். 9941/ஆதி(ம) ப.ந./2016–1, நாள் 26.02.2016 –ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

ப. அண்ணாமலை,
அரசு செயலாளர்.

பெறுநர்
பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை.5.
மாவட்ட ஆட்சித் தலைவர், வேலூர் மாவட்டம்.
மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்நல அலுவலர், வேலூர் மாவட்டம்.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 8.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-18/6/35
<u>நகல்</u>
நிதித்(ஆதி(ம)பந)துறை, சென்னை–9
ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர்(கமபா/ஆதிந5) துறை, சென்னை–9
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்புக் கோப்பு/ உதிரிகள்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஜா. தங்கம்
29.2.16
பிரிவு அலுவலர்.